காஞ்சி வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10	திருவள்ளுவராண்டு 2005 பங்குனி 25 (7-4-74)	இதழ்: 38

★

உள்ளே......

வாழ்க வசவாளர்கள் !
(அறிஞர் அண்ணா)

★

தடைக் கற்கள்
தகர்க்கப்பட வேண்டும்!
(தலையங்கம்)

★

இரு பொருள்
(கட்டுரை)

★

கீறல்
(சிறுகதை)

★

மலர்ச்சிக் கவிஞன்!

(கவிஞர் இரா. கண்ணிமை)

புரட்சி படித்தது புதுமை அடித்தது
புரட்டும் உருட்டும் ஒழிந்ததடா—இங்கே
புதுமகிழ் வின்பம் வழிந்ததடா!

வறட்சி விரட்டலில் உழைப்பை சுரண்டிய
வன்னெஞ்சர் கூட்டம் ஓடிந்ததடா—பாவின்
வேந்தனின் பெரும்படை படிந்ததடா!

முதலை அரட்டைகள் மோக குரட்டைகள்
முழங்கிட வழியில்லை மாய்ந்ததடா—கவிஞன்
முனகலின் பெருமிதம் பாய்ந்ததடா!

தலைவயிர் தொந்தியர் சரிந்து விழுதலே
சரியெனும் பேரொலி சிரித்ததடா—புதிய
சரித்திரம் புவியில் விரித்ததடா!

இருளைக் கிழித்து எழுகதிர் வீசிட
இதயம் மலர்ந்தபா வேந்தனடா—சுப்பு
இரத்தினம் எனும்நா வேந்தனடா!

மருளை அழித்த மலர்ச்சிக் கவிஞனின்
மாநிகர் தொண்டை போற்றுதா—அவனின்
மாத்தமிழ் பாட்டொளி ஏற்றுதடா!

கெஞ்சிப் பிழைத்தவர் அஞ்சி உழைத்தவர்
கிளர்ந்தெழ கவிக்குரல் விடுத்தவனும்—அறிவு
கீற்று இலக்கியம் கொடுத்தவனும்!

துஞ்சிக் கிடந்தவர் தோள்தட்டி எழுந்தார்
தூக்கி நிறுத்திய பாடல்களால்—பாரதி
தாசன் எனும்கலை ஆடல்களால்!

விலை: 0-25 காசு

இரு பொருள்

தமிழிலுள்ள பொருளிலக்கணம் அகம், புறம் என்னும் இரு பிரிவுகளையுடையது. அகப் பொருள் காதலையும் புறப் பொருள் வீரம், கொடை போன்றவற்றையும் உணர்த்தும். மக்களின் வீரத்தையும் கொடையையும் அவர் செயல்களாற் பிறருணர இயலுமாகையால் இவை புறப் பொருளாயின.

உலக வளர்ச்சிக்கு அன்பின் தொடர்பு இன்றியமையாதது. அந்த அன்பானது இரண்டு உயிர்களின் தனித்த நிலையில் உண்டாவதன்று; இரண்டின் கூட்டுறவால் நிகழ்வதாகும். அன்பென்னும் நல்வித்தானது முளைத்து வளர்ந்து முழு மரமாகி பயன் தருதற்கு நிலைகளமாயிருப்பது இல்வாழ்க்கை. இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடைய நல் வாழ்க்கையாக நடைபெறுமாயின் அதனைவிடச் சிறந்த பேறு வேறொன்றுமில்லை. இல்லற வாழ்வில் தலைப்படும் ஒருவன் ஒருத்தியென்னும் இருவருடைய உள்ளங்களில் தோன்றும் ஒத்த அன்பின் விளைவாகிய உணர்ச்சிகளையும், அவ்வுணர்ச்சிகள் ஒற்றுமைப்பட்ட நிலையில் அவர்கள் எய்தும் இன்பப் பேற்றினையும் மன்னர் மணம் செய்து கொண்டு நடத்தும் மனையறங்களையும், உலகியல் இன்பங்களைத் துய்த்துக் கழித்தபின் அவர்கள் உள்ளத் துறவு மேற்கொண்டு ஒழுகும் இயல்பினையும் உள்ளவாறு எடுத்துக் கூறுவதே அகப்பொருள் பற்றிக் கூறுவதாகும். காதல் ஒழுக்கத்தை இலக்கண நெறியால் வரையறுத்துக் கூறுதல் உலகில் தமிழர்க்கே உரிய தனிப்பெருஞ் சிறப்பாகும்.

உலகில் பிறந்த மக்கள் எய்துதற்குரிய உறுதிப் பொருள்கள் நான்கு. அவை அறம் பொருள் இன்பம் வீடு எனப்படும். அவற்றுள் வீடென்பது துறவாகிய காரண வகையாற் கூறப்படுவதன்றி இலக்கண வகையாற் கூறப்படாதது ஆதலின், ஏனைய மூன்றுமே நூல்களாற் கூறப்படும். அவற்றுள் இன்பம் என்பது அகம் என்றும், ஏனைய இரண்டையும் புறமென்றும் அடக்கிக் கூறுதல் தமிழர் மரபு. அவற்றுள் அகமாவது, ஒத்த அன்பினையுடைய ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறக்கும் இன்பமாகும். இஃது அக் கூட்டத்தின் பின்னர் இவ்வாறு இருந்ததென அவ்விருவராலும் உள்ளத்து உணர்வாலே நுகர்ந்து இன்பமுறு தொன்றுகலின் அகமெனப்பட்டன.

அகப் பொருளானது கைக்கிளை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணை பெருந்திணை என எழுவகைப்படும். இவற்றுள் கைக்கிளையாவது ஒருதலைக் காமம், அஃதாவது இன்ப நுகர்ச்சிக்கு உரிய இருபாலருள் ஒருவரிடம் மட்டும் தோன்றும் உணர்ச்சியாகும். இது சிறுமையுறவென்றும் கூறப்படும். வட நூலார் மணத்தை எட்டு வகையாக பிரிப்பர். அவை யாவையெனின் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம் இராக்கதம், பைசாசம் என்பனவாகும்.

அகத்தின் கூருகிய ஒத்த அன்புடையார் கூட்டமாகிய ஐந்திணை மணமே நூல்களார் பாராட்டப்பெறுவதாயிற்று. இந்த ஐந்திணை முதல், கரு, உரி முதலிய பொருள்களில் அடங்கும். முதற்பொருள் நிலமும் பொழுதும் என இரண்டு வகைப்படும். கருப்பொருள் ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை,யாழ், பண், தொழில் என பதினன்கு வகைப்படும். உரிப்பொருள் என்பது புணர்தலும் புணர்தல் நிமித்தமும், பிரிதல் பிரிதல் நிமித்தமும், இருத்தலும் இருத்தல் நிமித்தமும் உடலும் ஊடல் நிமித்தமும் இரங்கலும் இரங்கல் நிமித்தமும் எனப் பத்து வகைப்படும்.

அகப் பொருளில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களில் முதன்மையிடம் பெறுதற்குரியவர் தலைவன், தலைவி, தோழி என்பவராவர். பாங்கன், செவிலி, நற்றாய், பாணன், அறிஞர், கண்டோர் முதலியன பிறரும்

[13-ஆம் பக்கம் பார்க்க]

வித்துவான், தே. வே. சந்தானம்

காஞ்சி வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 7—4—74 | இதழ் 38

தடைக்கற்கள் தகர்க்கப்பட வேண்டும்!

தமிழகச் சட்டமன்றத்தில் கல்வி மான்யக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலிறுத்துப் பேசும்போது மாண்புமிகு கல்வியமைச்சர் **நாவலர்** அவர்கள்,

"...தமிழாசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்பதை அரசு கொள்கை ரீதியாக ஒப்புக்கொண்டாலும், முதனிலைத் தமிழாசிரியர்களாக இருப்பவர்கள் பி. ஏ. இரண்டாவது பகுதி **ஆங்கிலத்தில் தேர்வு எழுதி வெற்றி பெற்றால்** அவர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி அளித்து பி. டி. பட்டம் வழங்கலாம் என்று **பல்கலைக் கழகம்** கூறுகிறது. பி. டி. பட்டம் பெற்ற பின்னரே அவர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டி இருக்கிறது." (தினமணி 5—4—74)

—என்னும் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

'இயன்ற அளவு' தமிழாசிரியர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்னும் எண்ணத்தோடுதான் மாண்புமிகு கல்வியமைச்சர் **நாவலர்** இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்கிறோம். இருப்பினும், "ஆங்கிலத்தில் தேர்வு எழுதி வெற்றி பெற்றால்" என்னும் பல்கலைக் கழக நிபந்தனையின் பொருள்தான் நமக்குப் புரியவில்லை.

'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்னும் எழுச்சிக் குரல் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருக்கும் தமிழ் மறுமலர்ச்சிக் காலத்தில், 'தனித் தமிழ்' படித்த 'புலவர்'களுக்கு மட்டும் 'ஆங்கிலத் தேர்வில் வெற்றி' என்னும் நிபந்தனையைப் பல்கலைக் கழகம் ஏன் வகுக்க வேண்டும்?'

ஆங்கிலம் எல்லா நிலைகளிலும் ஆட்சி மொழியாக இருந்த காலத்தில் வேண்டுமானால், பள்ளித் தலைமையாசிரியராக வருபவர்களுக்கு ஆங்கில அறிவு தேவை என்னும் கூற்று பொருள் படைத்ததாக இருந்திருக்கலாம். ஆனால், முற்றிலும் தமிழ் நாட்டில் **'தமிழே'** ஆட்சி மொழி என்னும் இற்றை நாள் நிலையில் அஃது எப்படிப் பொருள் படைத்ததாக இருக்க முடியும்?

தமிழ்நாடு — தமிழே ஆட்சி மொழி — தமிழில் கடிதப் போக்குவரத்து—பள்ளிகளில் தமிழுக்கே முதலிடம் — இப்படிப்பட்ட சூழ்நிலையில் உள்ள ஒரு பள்ளித் தலைமைப் பொறுப்பை, தமிழாசிரியர் ஒருவர் ஏற்று நடத்த இயலாதா?

கல்லூரிகளில் இந்தி ஒரு பாடமாக இருப்பினும், இந்தி தெரிந்துதான் இருக்கவேண்டும் என்று எந்தக் கல்லூரி முதல்வரையும் வற்புறுத்த முடியாது — கூடாது! நியாயமும் அன்று!

அதுபோல், பள்ளிகளில் ஆங்கிலம் ஒரு பாடமாக இருப்பதால், ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றால்தான் தலைமையாசிரியர் பதவி என்று வரையறை செய்வது எந்தவகையிலும் நியாயமாகாது—முறையுமாகாது!

'பல்கலைக் கழகம்' இதனை உணர வேண்டும்! உணர்த்த வேண்டியது தமிழ்ச் சமுதாயத்தின் கடமையாகும்.

தமிழக மேலவையில் நடந்த கல்வி மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய மாண்புமிகு **சிலம்புச் செல்வர் ம. பொ. சி.** அவர்கள்,

"...தமிழ் படித்த ஆசிரியர்கள் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக வருவதற்குத் 'தடை' எங்கோ இருக்கிறது. ஒன்று, அவசியம்தான் என்று நினைத்துவிட்டபின், அதை நிறைவேற்றுவதில் தாமதம் கூடாது"

என்னும் கருத்தினை வலியுறுத்திக் கூறியுள்ளார். அந்தத் தடை எங்கே இருக்கிறது என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது.

தமிழாசிரியர்கள் தலைமையாசிரியர்களாக ஆகவேண்டும் என்பதில் தனி ஆர்வம் கொண்டிருப்பவர் மாண்புமிகு **முதல்வர் கலைஞர்** அவர்கள் என்பதை நாடு அறியும். 1972-ஆம் ஆண்டு சேலம் தமிழாசிரியர் மாநாட்டில்,

"...தமிழாசிரியர்கள் தலைமையாசிரியர்களாக வேண்டும் என்கிற கோரிக்கையை விரைவில் ஆய்ந்தே தீருவோம். தடைக்கற்கள் சில உண்டெனினும் தடந்தோள்கள் உண்டென்று செய்வோம்! என்னைவிட **நாவலர்** தடந்தோள் கொண்டவர், இந்தப் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டு தீர்த்துவைப்பார்"

என்று தமிழாசிரியர் நலன் நாடும் தமிழக முதல்வர் **டாக்டர் கலைஞர்** அவர்கள் தன் இதய வேட்கையை அன்றே வெளிப்படுத்தியுள்ளார். தற்பொழுது, மாண்புமிகு கல்வியமைச்சர் **டாக்டர் நாவலர்** அவர்கள், "ஓரியண்டல் கல்லூரிகள் மூலம் வழங்கப்படும் பட்டயப் படிப்பை (Title) பட்டப் படிப்பாக (Degree) ஆக்கவேண்டும் என்பதை அரசு கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்கிறது" (**தினமணி 5—4—74**) என்று தமிழகச் சட்டமன்றத்தில் அறிவித்திருப்பது புலவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய ஒன்றாகும்.

தமிழாசிரியர்கள், தலைமையாசிரியர்களாக ஆவதற்குரிய சூழ்நிலை உருவாக வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுதான் தமிழக அரசு செயல்படுகிறது!

தடைக்கற்கள் உண்டென்றாலும் அவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து, நன்மை பல செய்யத் துடித்துக்கொண்டிருக்கும் 'நல்லரசு' இது என்னும் நம்பிக்கை தமிழாசிரியப் பெருமக்களுக்கு என்றும் இருக்கவேண்டும்!

—**மணிவேந்தன்**

கிண்டல் கலம்பகம்

திருமணம் :

இளமையின் முடிவு, முதுமையின் ஆரம்பம்!
உரிமைக்குரலின் அடிமைப் பட்டயம்!
சுற்றித் திரிந்தவர்க்கு அளிக்கும் சிந்தனைச் சிறைச்சாலை!
வரவிருக்கும் துன்பத்தின் வடிகால்!
மறைமுகமான மனிதவிருத்தித் திட்டம்!
துன்பமான இன்பம்!

காதல் :

கொழுத்த இருஉள்ளங்களின் குமட்டல்!
நிம்மதியாய் இருந்தவனுக்குப் பிடித்தச் சனிமூட்டம்!
பரிதாபம் என்பதன் மறுபெயர்!
முதுமையின் துன்பத்திற்கு இளமையின் முன்னுரை!

விளம்பரம் :

மலத்தை அமுதமாக்கி, ஆணைப் பெண்ணாக்கி, பெண்ணை ஆணாக்கி, கிழவியைக் குமரியாக்கி, இறந்ததை உயிரோடுக் காட்டும் மந்திரசாலம்!

ஆண் :

பரிதாபத்திற்குரிய ஒரு ஜீவன்!

பெண்:

உலகத் துன்பங்களின் வித்து!

கர்ப்பம் :

கணவனுடன் படுத்துப் படுத்து எழுந்து வயிற்றைத் தடவிப் பார்த்தவளுக்குப் பக்குவமாய்க் கிடைத்தப் பத்துமாத வேதனை!

'சோ'

பிழைக்கத் தெரிந்த மனிதன்! அரைக்குடம்! ஆச்சாரியார் குடுமி!

கஞ்சத்தனம் :

தான்பெற்றக் குழந்தைக்குக் காசுக்கொடுத்துத் தான் பெயர்வைக்க வேண்டுமென்றால், அக்குழந்தைக்குப் பெயரே வைக்காதப் புத்திசாலிதனம்.

மழை :

நிலமங்கையின் மலைக்கொள்கைகளைப் பார்த்ததால் முகிலன் சிந்தியக் காமவிந்து!
இவ்வுலக அரசியல்வாதிகள் செய்யும் அக்கிரமங்களைக் கண்டு வானவன் சிந்தியக் கண்ணீர்த்துளி!

விபச்சாரி :

காசேதான் கடவுளடா என்ற தத்துவத்தை அறிந்தவள்!
பொதுஉடமைத் தத்துவத்தின் சமத்துவ எடுத்துக்காட்டு!
தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற விரிந்தமனம் படைத்தவள்!

—**வலசை து. செயராமன்**

வாழ்க வசவாளர்கள்!



கபடன்
காமுகன்
கலகம் விளைவிப்போன்
கட்டுக்கடங்காதவன்
கள்ளச் சிந்தையன்
காசாசைக்காரன்
காட்டிக் கொடுப்போன்
சதிகாரன்
பதவிப் பித்தன்
சுரண்டிப் பிழைப்போன்
சுயநலக்காரன்
குருத்துரோகி
கூடிக்கெடுப்போன்
பயங்கொள்ளி

இவைகளைவிடக் கடுமையும் கொடுமையும் நெளியும் 'வசவுகள்' இருக்க முடியாது—எவ்வளவு நீண்டகால விரோதியாக இருந்தாலும் இதைவிட இழிவாகக் கண்டிக்க முடியாது.

இவ்வளவும் இதற்கு மேலும்தான், தி. மு. கழகம் துவக்கப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டவுடன் கழகம் அமைத்தாகவேண்டும் என்ற ஆர்வம் கொழுந்து விட்டெரியும் உள்ளங்கொண்ட உறுதியாளர்களான இளைஞர்களும், பணிபுரிந்து நரைத்த முதியவர்களும், இலட்சியத்தைக் காத்திடத் தயங்கோம் என்று முழக்கமிட்டவர்கள் அனைவரும் அன்புக் கரம்பற்றி இழுத்ததால், சரியெனத் தயக்கத்துடன் முன்வந்த அண்ணாத்துரைக்குக் கிடைத்த அன்புரைகள்!!

சொரணைகெட்ட ஜென்மங்கள்கூடத் தாங்கிக் கொள்ள மறுக்கும் கடுமொழிகளே வீசப்பட்டன—எந்த மனிதனையும் வெறியனாக்கி விடக்கூடிய வசவுகள்.

தமிழ் நாட்டு அரசியலிலே மட்டுமல்ல, வேறு எந்த நாட்டு அரசியலிலேயும்—அரசியல் துறையிலே மட்டுமல்ல, எந்தத் துறையிலேயும், கருத்து மாறுபாடு காரணமாகப் பிரிந்தவர்களை, இவ்விதமான இழிமொழி மூலம் தாக்கினவர்கள் கிடையாது. ஆனால், இவ்வளவுடன் விடவில்லை எதிர்ப்பு வீசுவோர்!

வரலாறு தீட்டினர்—ஆரூடம் கூறினர்—எப்படித்தான் இப்படிப்பட்ட துரோகிகளைச் சகித்துக் கொண்டிருக்கிறீர்கள் அன்பர்களே! தோழர்களே! என்று தீட்டி எதிர்ப்பு முனைகளை அமைத்தனர்.

அவ்வளவுடன் விடவில்லை! கொலை செய்யவும் பின்வாங்காத கொடியவர்கள் இந்தத் துரோகக் கூட்டத்தார் என்று கூறினர்.

காட்டு முறையில் கை தேர்ந்த பண்ணை முதலாளியிடம் உழைத்து உருக்குலையும் உழவன் கேட்டிருக்க மாட்டான். இவ்வளவு இழிமொழிகளை—பழிச் சொற்களை, விஷ வார்த்தைகளை! இவைகளை வீசினர்—விட்டு விட்டு அல்ல—தொடர்ச்சியாக—இங்கோர் நாள் அங்கோர் நாள் என்றுகூட அல்ல, எங்கும், ஒவ்வொரு நாளும்! தமிழகத்திலே வேறு எந்தத் தனி மனிதனுக்கும், இவ்வளவு அர்ச்சனை நடந்திராது என்று கூறலாம்—இந்த வசைமொழிகளில் ஏதேனும் ஒன்றிரண்டேபோதும், யாரையும், நமக்கென்ன, ஏன் வீணான தொல்லை, எதற்காக ஏசலைக்கேட்க வேண்டுமென்று சலிப்புடன் கூறிவிட்டு பொது வாழ்க்கையிலிருந்து 'சன்யாசம்' வாங்கிக் கொண்டிருந்திருப்பர். எண்ணற்ற இளைஞர்களும், இயக்கத்தின் நெருக்கடியான கட்டங்களில், கைகொடுத்துதவிய கண்ணியவான்களும், ஏராளமாகத் திரண்டதாலும், வளர்ந்ததாலும்தான், இவ்வளவு 'இடிகளையும்' தாங்கிக்கொள்ள முடிந்தது—இவ்வளவு இழிச்சொல்லும் இதயத்தைத் தகிக்க முடியாமல்போயிற்று! கடுமொழி கேட்டுக் கண்ணீர் தளும்பிற்று எனினும் கலங்காதே-நண்பனே! என்று கூறி, ஆயிரமாயிரம் இளைஞர்கள் சூழ நின்று ஆர்வம் தந்ததால், புன்னகையும் மலர்ந்தது.

இழிமொழி அண்ணாத்துரைக்கு மட்டுமல்ல—உடன் சேர்ந்தவர் அனைவருக்கும். சரமாரியாக, வேக வேகமாக! கடு மொழிக்கு மேல் கடு மொழி! மனப் புண் ஆறுவதற்குள் மற்றோர் தாக்குதல்! இதயத்திலே பாய்ச்சியபடி இருந்தனர். ஏசல் ஈட்டிகளை—கொட்டிய குருதியைத் துடைக்கக்கூட அவகாசம் அளிக்கவில்லை இதோ வாங்கிக்கொள்—இன்னமும் வாங்கிக்கொள்—மேலும் தருகிறேன் பெற்றுக்கொள்—சுடச்சுட! சுரீல்சுரீலென்று! என்று சொல்லிச் சொல்லி கசையடி தருவதுபோல இருந்தது வசவு வீச்சு! இவ்வளவையும் தாங்கிக் கொண்டனர் தி. மு. கழகத்தினர்! இனி யாரும் எந்தக்காரணம் கொண்டும், இவைகளைவிடக் கடுமையான 'வசவு' வீசமுடியாது, பழிசுமத்த முடியாது—இரண்டாம் பதிப்பு, மூன்றும் பதிப்பு,

மலிவுப் பதிப்பு என்ற முறையிலே, வசை புராணத்தை மீண்டும் மீண்டும் ஆசை தோன்றும் போதெல்லாம், வெளியிடலாமேயொழிய புதிதாக கேட்டவுடன் நெஞ்சம் திடுக்கிடக்கூடியதாக, வேறுயாரும், எந்த வசவும் வீசுவதற்கில்லை, பழி சுமத்துவதற்குமில்லை, அவ்வளவு 'சம்பூரணமாக' நடந்தேறிவிட்டது, வசவு!! தாங்கிக் கொண்டனர், திராவிட முன்னேற்றக் கழகத்தினர்—தமிழகத்திலே மட்டுமல்ல எங்கும் இதைப்போலக் கண்டிருக்க முடியாது. தாங்கிக்கொண்டனர்—காரணம் என்ன —அந்த 'வசவுகள்' அவ்வளவும் சேர்த்து தி. மு. க. வின் வளர்ச்சியைக் கெடுக்கவோ, அதன் அமைப்பாளர்களின் ஆதரவாளர்களின் மன உறுதியைக் குலைக்கவோ முடியவில்லை பழி, பலத்தைத் தேடிக் கொடுத்தது. இச்சொல். நம் இதயங்களிலே புதிய வலிவை ஊட்டிற்று! நாம் தாக்கப்பட்டோம். வளர்ந்தோம்! எண்ணற்ற இளைஞர்கள் தந்த கண்ணீர் காணிக்கை வீண் போகவில்லை—வளர்ந்தோம், வளருகிறோம், விரோதத்தை வளர்த்துக் கொள்ளவில்லை, சுழலும். சுருவும் தாக்கிக் கொண்டிருப்பினும் பாதை அறிந்து கலம் விடுவோன்போல, பழி, இழிவு, வசவு எனும் சூழ்நிலைக்கு இடையிலேயே தி. மு. கழகத்தைத் துவக்கினோம் இரண்டாண்டுகளுக்குப் பிறகு! எண்ணிப் பார்க்கும்போது நம்மையுமறியாமல், மனம் துள்ளி விளையாடுகிறது—கழகம். கண்ணியமான முறையில் தழைத்திருக்கக் காண்கிறோம்.

தி. மு. கழகத் துவக்கத்தின்போது, நமது தோழர்களின் ஒவ்வொரு சொல்லும் திரித்துக் கூறப்பட்டது, ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு இழிவான நோக்கம் இருப்பதாக எடுத்துக் காட்டப்பட்டது. ஒன்றாக இருந்தகாலை, மலராகக் கருதப்பட்ட சொல்லும், செயலும், பிரிந்தோம் என்ற ஒரே காரணத்துக்காக, மலத்தினும் கேவலமானதாகப் பொதுமக்களிடம் கூறிவிடப்பட்டன. தமிழ் நடையின் மாண்புக்கு ஓர் எடுத்துக்காட்டு என்றனர் —பிரியுமுன்! பிரிந்தோம். சுவைதரு மொழியில் பேசியும், எழுதியும் வரும் சூதுக்காரர் என்று தூற்றப்பட்டோம்.

சிறுகதை உலகிலே பெரியதோர் மாறுதல், என்ற சிறப்புரை தந்தனர் குடும்பம் ஒன்றாக இருந்தபோது—வெளியேறினோம்—கதை எழுதும் கயவன் என்று கண்டிக்கப்பட்டோம், நாடு திருந்த நாடக மாடுகிறார்கள் என் நல்ல பிள்ளைகள் என்று பாராட்டுதல், பிரியா முன்பு—பிரிந்தோம். கூத்தாடும் கூட்டம் சேர்ந்து வயிறு கழுவும் வக்கற்றதுகள், என்று 'விருது' தரப்பட்டது. புயலெனச் சுற்றித் தென்றலெனப் பேசி வருகிறார்கள் என் ரத்தினங்கள் மாணிக்கங்கள் என்று புகழப்பட்டோம் பொறுக்கித் தின்றதுகள் போக்கிடமத்ததுகள் என்று தாக்குதல் கிளம்பிற்று. எல்லாம், தாங்கிக்கொண்டோம் அதன் பயனாக எதையும் தாங்கும் இதயம் பெற்றோம்.

நாலு நாள் கூத்து என்று கூறினர், பெரியதோர் அணிவகுப்பாக ஆகிவிடக்கூடாது தி. மு. க. என்பதற்காக! பார்த்துக்கொண்டே இருங்கள், பயல்கள் ஓடி ஆடி அலுத்து, ஏதேனும் ஒரு கட்சியிலே தஞ்சம் புகுந்து கட்டியங் கூறிக் காலந்தள்ளப் போகிறார்கள் என்று 'ஜாதகங்' கூறினர்—தோழர்களின் இடைவிடாத முயற்சியால், தி. மு. க. சோரம் போய்விடவில்லை. வீரர்களின் கோட்டமாகவே விளங்குகிறது.

ஆதரிக்க ஆள் யார்? அதுவும் இதுவும் கத்திவிட்டால் இயக்கமாகி விடுமா? அங்கே இங்கே கூத்தாடினால் காரியம் நடந்துவிடுமா என்று கூறினர். தி. மு. கழகம், தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் சிறப்பான முறையிலே மாநாடுகள் நடத்தி, தனிப் பிரச்சனைகளுக்கும் மாநாடுகள் நடாத்தி, இப்போது மாநில மாநாட்டைச் சென்னையிலே நடத்தும் நிலைக்கு வளர்ந்துள்ளது.

ஒரு இயக்கத்தை நடத்திச் செல்ல பணம் வேண்டாமா—இதுகள் பணக்காரர்களிடம் சென்று பல்லிளித்தால் கூடப் பணம் தருபவர் யார், எனவே துவக்கப்பட்ட கழகம் துவண்டுவிடும் வெகு விரைவில் என்று பேசப்பட்டது. கழகம் துவண்டு போகாதது மட்டுமல்ல, புயலையும் சமாளிக்கும் நிலையைப் பெற்று வருகிறது. பணம் தேடிச் சென்று பல்லிளிக்கவில்லை, பணிபுரிந்து காட்டிப் பாட்டாளித் தோழர்களிடம் மடிபிச்சை எடுத்து, பகுத்தறிவு ததும்பும் நாடகங்களை நடாத்திக்காட்டி, சீர்திருத்த வேட்கையினரிடம் செம்பொன் கேட்டது—கிடைத்தது இன்று வயிறு வளர்க்கவே வேறு கட்சி துவக்கியவர்கள்—என்ற வசவுக்கு ஆளான தோழர்கள், சென்னை நகரில் சுமார் நாலு மனை அளவுள்ள இடத்தில் அமைந்துள்ளதும், காணக் காட்சியாகவும் பணிமனையாக அமைந்திட வசதி நிரம்பியதும். முப்பதாயிரம் ரூபாய் விலையுள்ளதுமான சொந்தப் பணிமனையைப் பெற்றுள்ளனர் தி. மு. கழகத்துக்கு.

'கண்ணீர்த்துளிகள்' இதோ நமது பாசறை, நமது உழைப்பின் உருவமாக விளங்கும் பணிமனை, என்று பெருமையுடன் உலாவ ஒரு இடம்!! நம்மிலே பெரும்பாலானவர்களுக்கு உள்ள வீடுகள், சாமான்யமானவைகள்! ஆனால் நம் அனைவருடைய கூட்டு முயற்சியால் பொது ஆர்வத்தால், நமது கழகத்துக்கென அமைந்துள்ள. வீடு, மாளிகை போன்றது!! பழி, பலத்தைத் தந்திருக்கிறது—அதுதான், பொது வாழ்வுத்துறையிலே உள்ள 'அதிசயம்' தாங்கிக் கொள்ளும் சக்திவேண்டும், அதே போது திருப்பித் தாங்கிக் கொள்ளும் சக்தி வேண்டும், அதே போது திருப்பித் தாக்கினால்தான் நமது நெஞ்சிலே உள்ள நமைச்சல் அடங்கும் என்ற சபலம் தலைகாட்டக் கூடாது. இந்த மனநிலையைப் பெற்றிருக்கிறோம் — பெற்றுள்ள இந்தச் செல்வத்தை மேலும் வளமுள்ள தாக்குவோம்.

உண்மை உரைப்பதால் ஊறும் பழியும் துரத்தி வந்து தாக்குமே என்று அஞ்சுபவர்களால், பொது வாழ்விலே வெற்றி காணமுடியாது, பொதுநலப் பணியாற்ற முடியாது. அத்தகைய அச்சம் நம்மைத் தீண்டாதபடி, நம்மை நாம் பாதுகாத்துக்கொண்டோம்—இனியும் நமது பாதை, அதுவாகவே இருக்கவேண்டும். தூற்றுவோர் தூற்றட்டும்—தூபமிடுவோர் தாராளமாகச் செய்யட்டும்-எங்கோ கிடந்ததுகள் இன்று எல்லோராலும் கவனிக்கப்பட வேண்டியவர்களாகிவிட்ட விந்தை, உருவானதற்குக் காரணம், இழிமொழியும் பழிச்சொல்லும் கேட்டு இதயம் குமுறி, வழி தவறிச் செல்லாமல், 'வசவுகளை'

வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதி யில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட் ...	ரூ. 5	ரூ. 355
	ரூ. 10	ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு ...	ரூ. 5	ரூ. 337.50
	ரூ. 10	ரூ. 675.00

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

சிறு சேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

வெறும் வாயோசை என்ற அளவிலே கொண்டு, நமது பணி, வசவுகளுக்கு மறுப்புகள் கூறுவதல்ல. திராவிடச் சமுதாயத்தின் விடுதலைக்கு வழி காண்பதாகும் என்று திடமனதுடன், கண்ணியத்துடன் நமது சக்திக்கேற்ற வண்ணம், உழைத்துக் கொண்டிருப்பதுதான்! தி. மு. கழகத்தின் துவக்கத்தின் போதே, மலை மலையாகப் பழிமொழியும் இழிச்சொல்லும் துரத்தித் துரத்தித் தாக்கியது, ஒருவகையிலே நன்மைக்கேதான்.

துவக்கத்தின்போதே, இவ்வளவும் தாங்கிக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தநிலை ஏற்பட்டுவிட்டதால், கழகத்துக்கு, எதிர்பார்க்கக் கூடியதைவிட அளவிலும் வகையிலும் அதிக சிறப்பானதான வலிவு கிடைத்து விட்டது. இனி, பழிபோட்டுத் தலை வாங்கலாம் என்று எவர் எண்ணினாலும், இழிமொழி வீசி இடுப்பை ஒடிக்கலாம் என்று எவர் நினைத்தாலும், பலன் காணமுடியாது! யார், எவ்வளவு கேவலமாகப் பேசுவதாக எண்ணிக் கொண்டு எதைக் கூறினாலும். பதறவேண்டிய நிலையில் இல்லை, நமது முன்னாள் இருப்பிடத்தின் இன்றைய அலுவலர்கள், நமக்கு பழிகேட்டுப் பதறா உள்ளத்தைப்பெறும் பயனுள்ள பாடத்தைப் போதித்து விட்டனர்! நாம், அந்தப் பரீட்சையில் தேறிவிட்டோம்—எனவே, இடர்கள் எது வரினும் நமக்குக் கலக்கம் ஏற்படக் காரணம் இல்லை. கரி தன் குட்டிக்கு வீரமும் தீரமும் வருவதற்காக, துதிக்கையால் குட்டியை இழுத்தும் தள்ளியும், தட்டியும், கொட்டியும் பயிற்சி தரும் என்கிறார்கள். தி. மு. கழகத்துக்கு அத்தகைய பயிற்சியைத் தந்திருக்கிறது திராவிடர் கழகம். பயிற்சி போதவில்லையோ என்று ஒருவேளை எண்ணிக்கொண்டு மறுபடியும் பயிற்சிதர முன்வரக்கூடும். அதைத் தவறாகக் கருதவேண்டாம். பன்னெடுங்காலமாகப் பலப்பல பகைவர்களால் பாழாக்கப்பட்ட திராவிடச் சமுதாயத்திலே பணியாற்றக் கிளம்பியிருக்கிறோம்- பழிகளைத் தாங்கிக்கொள்ளும் மனப்பண்பு இந்த அறப்போருக்குத் தேவையான ஆயுதம். அந்த மன நிலையை நாம் பெறுகிறோம், 'வசவுகள்' மூலம் வாழ்க வசவாளர்கள்! வாழ்க போதகாசிரியர்கள்!!

கீறல்!

நான் வாழ்விழந்து, மாண்பிழந்து, வையகந்தனில் உழன்று தொழிலாளர்களின் வர்க்கம் தலை நிமிர்ந்து வாழ சரியானத் தலைவன் தோன்றாத காலம்; உயர்ந்தவன்—தாழ்ந்தவன்; ஏழை—பணக்காரன் என்ற சமுதாய பள்ள மேடுகள் நிறைந்த காலம்—என் தந்தைப் போன்று மோசடிகள் பல செய்திட்ட பேர்வழிகளின் நிகழ் காலம், சுப காலம். அற்ப தாள்களுக்கு ஆடையை அவிழ்க்கிற வேசிகளும், ஆளை மடக்கி அடித்து பிடுங்குகிற திருடர்களும், உயிர் கொலை புரிபவர்களும், தீமையே உருவான நயவஞ்சகர்களும் கூட தங்கள் செயல்களில் ஏதோ ஒரு நியாயத்தை கற்பித்துக் கொண்டு தானே அவ்வாறெல்லாம் நடக்கிறார்கள் என்ற ஊமை வேதாந்தத்தை மனதில் கொண்டு பஞ்சமா பாதகம் புரிந்து வருபவர்களில் என் தந்தையும் ஒருவர் என்று ஊரில் ஒரு சிலர் பேசிக் கொள்கிறார்கள். உண்மையும் அதுதான். ஏழையின் கோல்ட் பிளாக்காக — வில்ஸ் பிளாக்காக விளங்கும் பீடித் தொழிலில் ஆயிரத்துக்கு கால் ரூபாயாக, பல ஆயிரத்துக்கு பல கால் ரூபாயாக பெருக்கி தற்போது உதவா இலட்சியத்தோடு லட்சாதிபதியாக விளங்குகிறார்.

தொழிலுக்கு ஏற்றத் தகுதியும் திறமையும்; ஒழுக்கமும்; உயர் பண்பும்; கேட்பதற்கே இனிக்கும் நற்றமிழ் பெயர் கொண்டிலங்கும் நல்லோர் பலர் அவதியுற்றனர்—அல்லற் பட்டனர் — அவரை எதிர்த்து உரிமையைக் கேட்டதால். இதைக் கண்டு என் மனம் வேகும், பொங்கியெழும், பிரார்த்தனைச் செய்யும் — அவர்களை காப்பாற்று என்று நீதி, நேர்மையை நினைக்குங்கால் பாசமும் நேசமும் என் கால் தூசுகளாக மாறும். அப்பொழுதெல்லாம் என் தந்தையைப் பொய்யன் என்றும்—புரட்டன் என்றும்—குடிகாரன் என்றும்—சூதாடி என்றும்—என் மனச்சாந்தியை அமைதியை, சமாதானத்தை கலைப்பவர்—விரும்பாதவர்—வெறுப்பவர் என்றெல்லாம் குற்றம் சாற்றுவேன்—மனதுக்குள். இத்தகைய பஞ்சமா பாதகனுக்குத் தூக்கு தண்டனை விதிக்கிறேன் என்று என் மனம் தீர்ப்புக்கூறும்!

ஏன் அரச அவையிலே கண்டனத் தீர்மானம் கொண்டு வருவதைப்போல் பல பேர் முன்னிலையில் எத்தனையோ தடவைக் கொண்டு வந்திருக்கிறேன்-அதை என் முகம் காட்டியிருக்கிறது. என் முகத்தில் சோர்வோ கடுப்போ தென்படின் அவர் உடல்நிலை மாறும் அதுகாறும் உயிர் போகும்! ஏன் அவர் அவரது உயிரை என்னிடம் அடகு வைத்துள்ளார் என்றேக் கூறலாம்! ஆம்! அவர் தன்னுடைய உயிருக்கு இணையாக, இறந்த தன் காதலியின் உயிருக்கு என்பதை விட என் அன்பு அவளுடைய உயிரை விட பெரிது என்பதை உலகார்க்கு அறிவிக்க—அதிசயப்பட ஓர் பளிங்கு மாளிகையை உருவாக்கினானே மும்தாஜ் அதையும் மிஞ்சுகின்ற அளவுக்கு ஓர் வெள்ளை மாளிகை! அது அவர் செய்யும் புதுப்புது விதவித பாவங்களுக்கும் கருமங்களுக்கும் பரிகாரம் தேடும் மருத்துவ மனை!

மருந்தகம் சுற்றிலும் மலர் தோட்டங்கள். ஆங்கே:-

தன்னகத்தை எண்ணிடாது தன்னலத்தை நீக்கி பொய்மையின்றி உண்மை கூறி சொன்ன வழி தான் நடந்து பொன்மனத்தார் நன்மனத்தார் உள்ளமதில் குடிக் கொண்டிருக்கும் தமிழ் மகளின் தவப்புதல்வனும் தென்னாட்டு காந்தியும், தென்னவராலும் வடவராலும் பொதுமைக் கொண்டாடும் மகாத்மா காந்தியும் புன்சிரிப்பின் நல்லரும்பு பூத்திடும் இதழுடனே சிலையாக நின்றிருந்தனர். சாத்தன் கோவிலில் தேவந்திகை போல அந்த நற்தெய்வங்கள் சிலை பெற்றிருக்கும் வெள்ளை மாளிகையிலே பிணி போக்கும் மருத்துவத்தை—என் பணியைச் செய்து வந்தேன்.

மாலை வேளை மருந்தகத்தில் யாருமில்லை கந்தசாமித் தவிர. நகர்கின்ற கடிகார முள்ளைப்போல் என் அகத்தில் அன்றாடம் அலையும் அவள் நினைவு வரவே சற்று மனத் தாங்கலோடு அறைக்கு வெளியே வந்து கூடத்தில் அமர்ந்தேன். அமர்ந்தவன் மின் வானை அலங்கரித்துக் கொண்டிருக்கும் முழு நிலவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். அங்கே விண்மினென்று நிலவை ஊடுருவிச் சென்றது. நெஞ்சு பகீரென்றது—சகுனத்தில் நம்பிக்கை கொண்டிருந்ததால்.

சற்று நேரத்தில் எழில் சிந்தும் கன்னியை தோளில் சுமந்தபடி டாக்டர்...... டாக்டர்...... என்று ஒரு கூட்டம் மருத்துவ மனைக்குள் நுழைகிறது. கடவுள் சித்தம் கொண்டு மருத்தவம் அளித்து காப்பாற்றத் தயாராகுகிறேன். ஆனால் அந்த எழில் நங்கையின் வாழ்வு என்ற சிறுமலரைப் பறித்துவிட்டான் மா பாதகன்—காலன்.

கலை இரேணு, பீ.எஸ்சி.,

திரண்ட கூட்டம் எல்லாத்திசைகளிலும் சிதறியது. தோல்வியைக் காலன் கொடுத்த பரிசாகப் பெற்றுத் திரும்புகையில் சார்... சார்... குரல் கேட்டுத் திரும்புகிறேன். கந்தசாமி ஓடிவந்து காதலித்த கயவன் "எல்லாம்" முடிந்த பிறகு கைவிட்டதால் மனம் உடைந்து விஷம் குடித்து தற்கொலை செய்துக் கொண்டாளாம் சார்! அந்த அப்பாவிப் பெண்! காதலுக்குத்தான் கண் இல்லை என்பார்கள் ஆனால் காதலர்களுக்குக்கூடவா அது இல்லை என்று வருத்தப்பட்டான்.

என்ன தற்கொலையா?......... என்னுடைய நா தழுதழுத்தது. அப்படியானால் என்னுடைய...... சீ! சீ! அப்படியெல்லாம் இருக்காது. என்னுடைய அமுதா அந்த அளவுக்கு கோழையாக மாட்டாள். தவிப்பில் சிக்கி சீரழிந்து போயிருந்த மனம் தன்னிலைக்கு வந்த பிறகு அப்போது ரசிக்கப் புறப்பட்டது இப்போது புலம்பலை சந்தித்துதானே தீர வேண்டும் — அது ஆண்டவன் இட்டச் சட்டம் அதை நான் மீறிடுவேனோ!—என்று தேறியது. பழைய நினைவுகளை அசைப்போட ஆரம்பித்தன. தாயற்ற நிலையில் தன் தந்தையின் காப்பில் வளர்ந்து புகுமுக வகுப்பு படிக்கும் காலத்து பணிவிடைச் செய்ய வந்தவள் தான் இந்த அமுதா! வந்த புதிதில் அவள் சிறியவள் அதனால் அவளை ஏய் என்றும் பேய் என்றும் உரிமையோடு அழைப்பேன். வேலை செய்ய வந்தவளை வேலைக்காரி போல்தான் நடத்தி வந்தேன். காலம் கரைந்தது. அவளும் பருவத்து தலைவாசலில் நின்று பூத்துக் குலுங்கினாள். அவளை காணும்பொழுதெல்லாம் என்னை அறியாமலே பொங்கியெழும் முழு நிலவை புலவன் எப்படிப் பார்ப்பானோ அப்படிப் பார்ப்பேன்—ஆசையாக. ஆசை கனவாக நிழலாட-கனவு அன்பாக ஒளியாட என் இதய மேடையில் நாட்டிய பேரொளியாக மாறினாள்.

பள்ளியில் நான் படித்த இலக்கணம் மறவாதிருக்க தேன் சிந்தும் அவள் இதழ்மீது சிந்து பாடினேன்!

சேலையினுள் முக்கனியைச் சேர்த்தவிழ்க்கும் நீல விழியாளை கசக்காமல் பைய நெருக்கம் தந்து, காற்றுக்கு எங்கள் இணைப்பில் ஊடுருவும் சக்தியில்லை என்ற உண்மையை நடைமுறையில் தெளிந்தேன்!

காதல் — அதுதான் துன்பங்களும் துயரங்களும் நிறைந்திருக்கும் தடாகம். அதில் தான் இன்பெனும் செந்தாமரையும் முளைக்கின்றன என்ற தத்துவத்தை உணர்ந்தேன்!

இவ்வாறு புதுப்புது விதவித தத்துவங்களையும் விளக்கங்களையும் தந்து வந்த என் காதல் ஊர்வசிகளுக்கு அவலாகியது— மெல்ல நன்றாகவே மென்றார்கள். மென்றவர்கள் காறியும் துப்பினார்கள். ஏனெனில் நான் படித்தவனும் பட்டம் பெற்றவனும், உயர் குலத்தவனும், பல லட்சத்துக்கு அதிபதியாம். அவளோ! கல்வியிலும், செல்வத்திலும், வாழ்க்கை வளங்களிலும் பின் தங்கியவளாம்! பாதைகளிலும் கோவில்களிலும் வெறுத்து ஒதுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் விடிவெள்ளியாம்! மேலும் நான் டியூப்லைட்டாம்—அவள் குத்துவிளக்காம்!

இவ்வாறு புதுப்புது அடையாளங்களைக் காட்டி சமுதாயம் சிரித்தது. நாங்களோ! சமுதாயத்தை புறக்கணித்து, விதியை வென்று சிரித்திடுவோம் என்று ஏரிக்கரையென்றும், சோலையென்றும், குளமென்றும், தடாகமென்றும், இடத்தை மாற்றினோமேத் தவிர மனத்தை மாற்றவேயில்லை!

இன்பமெனும் தடாகத்தில் மூழ்கியிருக்கும் நாங்கள் ஊரை— உறவினரை மறந்திருக்கலாம். ஆனால் என் தந்தை... சைத்தான் வேதம் பேசுவது போல் தன்னிலைத் தாழாமையும், அந்நிலை தாழ்ந்தால் உயிர் வாழாமையுமே மானம்—தன்மானம் அதை நான் பறக்கவிட்டவன் என்றும்; உலகத்து உயர்ந்தவரோடு பொருந்த ஒழுகும் முறையே ஒழுக்கம் அதை நான் இழந்தவன் என்றும் குற்றம் சாட்டினார்; கத்தினார்; நெருங்கி வந்து கர்ஜித்தார். மேலும் எனக்காக தன்னைப் பறிகொடுத்ததுமல்லாமல் ஒரு தீமை கூட நினையாத உத்தமியை தூற்றினார். இந்தத் தூற்றல், கூச்சல், வாதம் எனக்கு புதியதல்ல! அதுகள் நெடுநாளைய வழக்கமாயிற்று!

எனவே முதலில் ஏற்பட்ட கலக்கம் பின்பு இல்லாமல் போயிற்று.

ஆனால் கடைசியாக ஒருநாள் 'இந்நிலை நீடித்தால் என் கழுத்தில் கயிறு பேசும்' என்றாரே அதுதான் என்னை நிலை குலையச் செய்தது, வயிற்றைக் கலக்கியது. அப்பா!... என்ன காரியம் செய்ய துணிந்தீர்! என்று கதறி காலடியில்வீழ்ந்தேன் அவர் பிடிவாதத்திற்குப் பணிந்து பிடிகொடுத்தேன். ஆம்! பகல் நேரங்களிலும் இரவு நேரங்களிலும் என் தந்தையால் சமுதாயத்தில் ஏசிய-வீசிய வார்த்தைகளை கட்டளையாக்கி ஆணையிட்டேன்— என்னை மறந்து விடு என்று அவளுக்கு.

திடீர் கட்டளையைத் தாங்காத அந்தப் பூவுடலோ தளர்ந்தது, மெல்லிடை துவண்டது, நெற்றி பசலை நிறம் பெற்று முகம் சுருங்கியது. பாதரசம் போல் உழலும் விழிகளிலே உப்பு நீர் வடிந்தது. அதற்காக நானும் என் மனக்கண்ணில்ரத்தக்கண்ணீரை வடித்தேன்.

நிகழ்ந்ததை தூக்கத்தில் வந்து போன கனவாக கருதி மறந்தேன். அப்பா பிள்ளை! என்ற பட்டத்தோடு மருத்துவப் பட்டம் பெற பட்டிணத்திற்குச் சென்றேன். படிப்பில் மனம் படியாது, பழைய நினைவுகளிலே நீந்தினேன். இந்த நாடகம் நான்கு ஆண்டாக நடந்து நிரைவு விழாவும் கொண்டாடியது. பட்டம் பெற்றேன். பெற்ற மகிழ்ச்சியில் இறைவனது ஆசீர்வாதத்தை சேர்க்க அவனிடம் ஓடினேன் அப்போது அங்கே:-

அண்ணா! நாலு காசு கொடுங்களேன் வயிறு பசிக்குது என்று வயிறு தடவி அழுதாள் ஒரு நாதியற்றவள். இதைக் கண்ட எனக்கு ஓ! வென்று அழவேண்டும் போல் தோன்றியது. என்னுடைய அமுதாவுக்கும் இந்நிலை ஏற்பட்டிருந்தால்...... என் மனம் பதறியது, இறைவா! நான் செய்த தவற்றை மன்னித்து என்னவளை எனக்கு நிரந்தரமாக்கு என வேண்டினேன் அவள் எங்கு எந்நிலையிலிருந்தாலும் ஏற்றுக் கொள்கிறேன் என உத்திரவாதமும் அளித்துவிட்டேன், அன்றை

யிலிருந்து இன்று வரை அவளைத் தேடுகிறேன்...... தேடுகிறேன். அவள் என் கண்களுக்கு அகப்படவேயில்லை!

சார்! சார்! — கந்தசாமியின் குரல் கேட்டு பழைய நினைவுகளிலிருந்து விடுபெற்று என்னவென்றேன்.

சார்! யாரோ? ஒரு பெண்— தொழுநோயால் பாதிக்கப் பட்ட பெண் அவஸ்தையுடன் வெளியே நிற்கிருள்; கூப்பிட்டு விசாரியுங்க என்ருன். அழைப்பு மணியை அழுத்தினேன் அவள் வருகையை வாடை தெரிவித்தது. வந்து நின்றவள் மேனியோ?... தீயில் வெந்ததைப் போல் கருகியிருந்தது—அழுகியிருந்தது; கை கால்களெல்லாம் வீங்கி ஒரு வித நீரை சுரந்து கொண்டிருந்தது; விரல்கள் அழுகி அருகியிருந்தன; முகமோ சீழ் பிடித்த புண்கள் நிறைந்து பார்ப்பதற்குப் பயங்கரமாக—விகாரமாக — அருவெறுப்பாக இருந்தது. ஆனல் அவளுடைய கண்கள் மட்டும் சுடர் விட்டு பிரகாசித்தன. அந்த கண்களை எங்கோ பார்த்தமாதிரி...... அதுவும் அதில் என்னை நானே பல முறை கண்டு களித்த மாதிரி...... தடுமாருகிறேன். நோ...

ஆமாம் அது... அது... அமுதாவின் கண்களா? நெஞ்சு படபடத்தது. தலை சுற்றியது. நெஞ்சை இரு கைகளால் அழுத்தி மூச்சு பிடித்து உன் பெயரென்ன? என்றேன்.

அமுதா! அவளது அடி வயிற்றிலிருந்து வந்தது. அமுதாவா?... எரிமலை வெடித்தது. புயல் வீசியது. பூமி நகர்கின்றது. ஐயோ கடவுளே! குழந்தையாக இருந்தவள் இப்படி குஷ்டரோகியாக நிற்கிருளே இதை காணவா இவ்வளவு நாள் தவமிருந்தேன். வாய்விட்டு அழுதேன். என்னை அடையாளம் கண்டு கொண்ட அவளோ விரக்தி சிரிப்போடு, டாக்டர் ரமேஷ்! எனக்காக நீங்கள் காத்திருக்கலாம்; உனக்காக நான் காத்திருக்கலாம் ஆனல் நம்மிருவருக்காக காலம் காத்திருக்காது. தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண் குறளால் "காலை அரும்பி பகலெல்லாம் போதாகி மாலை மலர்வது காதல்" என்ருனே வள்ளுவன் அதைத் துறந்தேன்—தங்களால்.

அழச் சொல்லி அல்லது இடித்து வழக்கறிய வல்லால் நட்பு—காப்பு இல்லாத—உடலைத் தவிர வேறு சொத்து என்று சொல்வதற்கேதுமில்லாத—பணத்தையே பார்க்காது பசியையேப் பார்த்து பழக்கப்பட்ட நான் என் மாநிற இளந் தளிர் உடலுக்கு நல்ல கிராக்கி வந்தவிடத்து அரங்கமைக்கச் சொன்னேன். அரங்கேறினேன். என்னல் கற்றவர்களும் மற்றவர்களும் கலைவளர்த்தனர். உற்ருர் பொருள் பெற்றனர். பெற்றவர்கள் தலை குனிந்தனர். தன் மானத்தையும் கண்ணியத்தையும் விற்றதால் நான் பெற்ற மாற்று பொருள்—இந்த தொற்றுநோய் —தொழுநோய் — சமுதாயம் தந்த கிறல்!

நான் இப்போது ரசம் போனக் கண்ணுடி—கருகிய மலரிலிருக்கும் தேன்—எச்சில் பழம்—தடுக்கி விழும் இடமெல்லாம் மலிவு விலையில் கிடைக்கும் கடை சரக்கு டாக்டர்......கடைசரக்கு. அமுதா தேம்பி தேம்பி அழுதாள். அழுதவளோ? நேர்கொண்டிருந்த முகத்தை திருப்பிக் கொண்டாள். எங்கோ வெறித்த விழிகளின் நிலைகுத்தல்—அவளது ஊமை மனதில் தான் எத்தனை குமறல்களோ—வேதனை துடிப்புக்களோ!

அமுதா! என் சுயநலத்துக்காக உன்னை துறந்த நான் பெரிய மறவன்! கோழை! ஆண்மையற்ற பேடி!

நான் செய்த தவற்றுக்காக இப்போதே உன் காலடியில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்கிறேன் அமுதா! ... என்னை மன்னித்துவிடு அமுதா! ... என்னை மன்னித்து விடு! என்று கெஞ்சினேன், கூத்தாடினேன். அவள் கண்ணிலிருந்து வழியும் உப்பு நீரை துடைத்து அமுதா!... நீ எனக்கு என்றைக்குமே மணக்கும் ரோசா—என் நெஞ்சத்திலும் நினைவுகளிலும் மணக்கும் சாதி மல்லிகை! அந்தப் பூக்களின் மணத்தை பூவையாகிய உன் பேச்சில் காணுகின்றேன். சமுதாயத்திற்காக நான் உன்னை வெறுத்திருந்தாலும் 'நம் வாழ்வு' என்ற மலரை கருகச் செய்ய என்றுமே துணிந்ததில்லை — துணியப்போவதுமில்லை.

தீண்டத் தகாதவளாகிய உன்னை — தீய நடத்தையினல் சீரழிந்தவளாகிய உன்னை—திக்கற்றவளாகிய உன்னை—சமுதாயத்தின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் உன்னை மன்னித்து இந்த சமுதாயத்தின் தீர்ப்புக்கு எதிராக மணந்து கொள்ளத்தான் போகிறேன். என்னேடு தாலி கட்டாத மனைவியாக ஓரிரு தினங்கள் படுக்கையை பகிர்ந்து கொண்ட உனக்கு நான் கொடுத்த வாக்கை காப்பாற்றத் தான் போகிறேன்!

வா! அமுதா வா! என்று ஆவேசமாக அவளது கரங்களைப் பற்றி இழுத்துச் சென்று அந்த இரு பெரு தெய்வங்கள் முன் நிறுத்துகிறேன். மலர் மாலையை சூடுகிறேன்.

ஐயோ அத்தான்! சாக்கடையில் மூழ்கி காலத்தை கணித்துக் கொண்டிருக்கும் எனக்கா வாழ்வு தந்தீர்! அதுவும் இந்நிலையிலா? என்றவள் ஆச்சரியம் தாங்காது தடுமாறி என் காலடியில் வீழ்ந்தாள்.

விழுந்தவளோ! நெஞ்சு வலிக்கிறது என்று துடித்தாள். என்ன? அமுதா நெஞ்சு மலர வேண்டிய நேரத்தில் வலிக்கிறது என்கிருய் என்றேன்.

அவளோ? வலிதாங்க முடியவில்லையே என்று புழுவாய் துடித்தாள். என் நெஞ்சு படபடத்தது.

மருத்துவம் செய்ய மருந்துக்காக அறைக்கு சென்று திரும்புவதற்குள்.........

அவள் உடலில் இருந்த சொற்ப குருதியும் வாயின் வழியாக வெளியேறிக் கொண்டிருந்தது. என் நெஞ்சு பகீரென்றது.

இறைவா! இதென்ன சோதனை என்று அவ்விரு தெய்வங்களை வணங்க கையெடுத்தேன். அப்போது சிலைகளின் காலடியில் ஏற்றி வைத்திருந்த குத்துவிளக்கு மங்கலாக—இன்னும் மங்கலாக—கடைசியில் அணைந்தே போயிற்று!

★

‘காஞ்சி’

அறிஞர் அண்ணா நினைவு சிறப்பு மலர்

பேரறிஞர் அண்ணாவின் படைப்புக்களுடன்

கழகத் தலைவர் கலைஞர்

கழகப் பொதுச்செயலாளர் நாவலர்

அமைச்சர் பெருமக்கள் அருந்தமிழ்ச் சான்றோர்கள்

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்	ஏ. கே. வில்வம்
டாக்டர் ந. சஞ்சீவி	மணிவேந்தன்
டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்	பல்லவன்
டாக்டர் சாலை. இளந்திரையன்	அரிமதி தென்னகன்
குருவிக்கரம்பை சண்முகம்	தி. நா. அறிவுஒளி
தாமரைக்கண்ணன்	தமிழ்ச் சுரபி
இரா. கண்ணிமை	ஆத்தூர் பன்னீர்ச்செல்வம்
கருமலைப் பழம்நீ	எழிற்கோவன் மற்றும்

இளைய தலைமுறையின் இலட்சிய எழுத்தாளர்கள்

அனைவரின் எழுத்தோவியங்களைத் தாங்கி - எழில்மிகு மூவண்ண முகப்போடு ஏப்ரல் திங்களில் வெளிவரவிருக்கிறது.

தேவைக்கு முன்கூட்டியே தெரிவிக்கவும். விலை ரூ. 3-00

மேலாளர், விவரங்கட்கு:

“காஞ்சி” அலுவலகம் : : காஞ்சிபுரம்-3.

“மலருக்கு” சேர்த்து சந்தா கட்டாத சந்தாதாரர்கள் ரூ. 3-00 அனுப்பி மலர் பெற்றுக்கொள்ளவும்

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்-நெசவோ நெஞ்சையள்ளும்

- ★ குர்தாக்கள்
- ★ பெல் பாட்டம்கள்
- ★ லுங்கிகள்
- ★ சேலைகள்
- ★ உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள் . . .

கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை! ஆதாயமான உழைப்பு!

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.

(பாலசுந்தரம் பில்டிங்ஸ்)

எழும்பூர் : : சென்னை-8.

'குட்டிக் கதைகள் ஒரு நூறு!'

— புலவர். அரிமதி தென்னகன்

44. தொண்டன்

ஒருவன், மற்றவனைப் பார்த்து

"என்ன தலைவரே! போயும் போயும் ஒரு தொண்டனுக்குக் கால்பிடித்து விடுகிறாயே" என்று கேட்டான்.

அவன் திருப்பிக் கேட்டான்

"நீ யாருடைய காலைப் பிடித்து விடுவாய்?"

"நான் தலைவர்களுடைய காலைப் பிடித்து விடுவேன்"

தொண்டனின் காலைப் பிடித்து விட்டுக்கொண்டே, தலைவர்களின் காலைப் பிடிப்பவனிடம் சொன்னான்,

"தொண்டன் தலைவர்களை உருவாக்குபவன்; தலைவன் தொண்டர்களை உண்டாக்குபவன்."

மற்றவன் தலைவனாக ஆனதற்கும், தான்மட்டும் தொண்டனாகவே இருப்பதற்கும் காரணம் இதுதான் என்று அப்போதும் அவனுக்குப் புரியவில்லை.

அதனால்தான்,

அவன்,

இன்னும் தொண்டனாகவே இருக்கிறான்.

45. தாய் விடு

செய்துவிட்ட தப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள வழிகேட்டு ஒரு பருந்து, சிறிய குருவி ஒன்றிடம் வந்தது.

சிறிய குருவியும் சிறந்த வழியைச் சொன்னது.

கொடிய பருந்தும் ஆபத்திலிருந்து தப்பித்துக் கொண்டது.

பருந்து சிறிய குருவியிடம்,

"இவ்வளவு அழகான பொய்யை எனக்குச் சொல்லித் தர உனக்கு கற்றுக் கொடுத்தவர் யார்?" என்று கேட்டது.

"என் தாயைக் கேள்"

சிறிய குருவியின் பேச்சுப்படி தாய்க்குருவியிடம் பருந்து கேட்டது.

தாய்க்குருவி பதில் சொன்னது,

"உலகப் புகழ் பெற்ற பெரிய வக்கீலின் வீட்டில்தான் நான் அதைக் குஞ்சு பொரித்தேன்"

46. சபலம்

ஏதாவதொரு திரைப்படத்துக்குப் போகவேண்டும் என்று விரும்பினார் ஒருவர்.

எப்போதோ ஒருமுறை போவதால் எந்தப்படத்துக்குப் போவது என்ற கேள்விக்கு விடைகாண அருகில் இருந்த நண்பர்களின் துணையை நாடினார் அவர்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு படத்தை ஆபாசம் என்றனர்.

ஒருவர் ஆபாசம் என்றதை மற்றவர் 'ரியாலிசம்' என்றார்.

ஆனால்,

எல்லோரும் ஒரே மனதுடன் ஒரு படத்தை மிகமிக ஆபாசமான படம் என்றனர்.

"சிச்சி, உலகமே கெட்டுக் குட்டிச் சுவராகிவிடும் போலிருக்கிறது; எதைக் காட்டறது; எதைக் காட்டக் கூடாதுங்கற வரம்பே இல்லாம போச்சு;

இதையெல்லாம் பாத்துகிட்டு ஒரு ஆட்சிவேற இருக்குது" என்று கோபத்தைக் கொட்டிவிட்டு எழுந்த அவர்,

நேராக,

சினிமாக் கொட்டகையை நோக்கிச் சென்றார்.

படம் பார்த்துவிட்டு வரும் போது அவர் சொன்னார் இப்படி:

ஆபாசம்... ஆபாசம்னு சொன்னீங்களேன்னு பார்த்தேன். அவ்வளவும் ஆபாசமாதான் இருக்கு; என்ன ஆட்சியோ! என்ன சட்டமோ!!"

47. சாபம்

"உலகமே பொய் மயமாகப் போய்விட்டதே; இதை மாற்றக் கூடாதா மகாதேவா!"

கொஞ்ச வரும் நேரம் பார்த்து பார்வதி பரமசிவனிடம் கேட்டாள்.

"அதற்கென்ன அன்னமே; ஆவன செய்கிறேன்" என்ற பரமசிவன் 'பொய்மையே அழிந்து போ' என்று சாபம் கொடுத்துவிட்டார்.

அடுத்த வினாடி,

இதிகாச புராண வேதங்கள் புதைபட்ட இடத்தில் புல் முளைக்கத் தொடங்கியது.

அப்போதும்,

அந்தச் சாபம்

தமிழ்நாட்டுச் சில நாளேடுகளை ஒன்றும் செய்ய முடியவில்லை.

பரமசிவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது

★

இரு பொருள்

[2-ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆங்காங்கு இடம் பெறுவர். இவருள் தலைவன் தலைவி என்னும் இருவர்க்கும் சிறப்பாக இலக்கணங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அறிவும், ஆற்றலும், ஆராய்ச்சியும், பண்பும், நண்பும், பழிபாவம், அஞ்சுதலும் கடைப்பிடியும், நிறையும் கலங்காது துணிதலும் தலைவனுக்குரிய இலக்கணங்கள். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்பன எப்பொழுதும் தலைவியை விட்டு நீங்காமல் இருத்தற்குரியன. அடக்கம் நிறை நேர்மை முதலியனவும் தலைவியினிடம் இருக்கவேண்டிய பண்புகள்.

ஐந்திணை ஒழுக்கம் களவு, கற்பு, என இருவகைப் படும். களவாவது தலைவனும் தலைவியும் பெற்றோர் அறியாமல் தாமே எதிர்பட்டுக் கூடுவது. இக் களவு பிறர்க்குரிய பொருளை அவர் அறியாமற் கவர்ந்து கொள்ளுங் களவுபோல தீயது அன்று. அத்தலை மக்கள் பின்பு மணஞ் செய்துகொண்டு மனையறம் பேணி வருதல் அறமாகவே கருதப்படும். கற்பாவது குலம் முதலியவற்றால் ஒத்தவனாகிய தலைவனுக்குத் தலைவியின் பெற்றோர் வதுவைச் சடங்குகள் நடத்தி அவளைக் கொடுக்க அவன் கொள்ளுதல். செய்தவொன்றைச் செய்யவில்லையென்று கூறுதலும் தொடக்கத்தில் அன்பினால் மேற்கொண்ட ஒழுக்கத்திலிருந்து தவறுதலும் உலகியலிற் காணப்பட்டமையால், மக்கள் வாழ்க்கை மாசடையாதிருத்தற் பொருட்டுப் பெரியவர்கள் காரணங்கள் வகுத்தனர்.

கற்புக் காலத்தில் ஊடியும் கூடியும் இன்பம் நுகர்தலும் விருந்தோம்பல் முதலிய அறஞ் செய்தலும் கல்வி, பகை, தூது, காவல், பொருள், பரத்தை என்னும் இவை பற்றிப் பிரிதலும் நிகழும். மேலும் முதல் மனைவியிருக்கும்போதே தலைவன் மற்றொருத்தியை மணஞ் செய்து கொள்ளுதலும் உண்டு. அல்லாமலும் காமக்கிழத்தி, காதற் பரத்தை, சேரிப் பரத்தை என்றும் பல மாதருடைய தொடர்பும் தலைவர்கள் பெற்றிருப்பர். ஆடவர் நிலை எவ்வாறாயினும் குலமகள் ஒருத்தி ஒருவனையன்றி மற்றொருவனைக் காதலித்தாள் என்னும் செய்தி அகப்பொருளில் எங்கும் கூறப்படவில்லை. இவ்வாறு களவின் வழிவந்தும், களவின்வழி வாராமலும் கற்பொழுக்கத்தை மேற்கொண்ட கணவன் மனைவி என்பர். இருவரும் மக்களோடு மகிழ்ந்து மனையறங் காத்து மிக்க காம வேட்கை தீர்ந்தபின் சிறந்த நிலையை அடைய முயல வேண்டும். இதுவே இல்லறத்தின் முடிந்த பயன் என்று அகப்பொருள் நூல்கள் அறிவிக்கின்றன. அகப்பொருளைக் கூறும் இலக்கண நூல்களிற் சிறந்தவை தொல்காப்பியம், இறையனார் களவியல், நம்பியகப் பொருள் என்று தமிழ் சான்றோர் பகர்கின்றனர்.

கி.பி. 12ஆம் நூற்றாண்டின் இறுதியிலே தொண்டை நாட்டிலே புளியங்குடி என்னும் ஊரிலே பிறந்தவரான நாற்கவிராசநம்பி என்பவரால் எழுதப்பட்டது. இவருடைய தந்தை உய்யவந்தார், சைனர், குலசேகர பாண்டியன் காலத்தவர். இந் நூல் தொல்காப்பியம் பன்னிரு படலம் என்னும் நூல்களைப் பின்பற்றி எழுதப் பெற்ற சிறந்த அகப்பொருள் விளக்க நூல். இதற்கு இலக்கியமாக விளங்குவது தஞ்சைவாணன் கோவை.

புறப்பொருளை திணைவகையாக முறையே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என பகுக்கப்பட்டுள்ளன. ஆனால் புறப் பொருளை மட்டும் பாடிய பன்னிரு படலம் புறப்பொருள் வெண்பா மாலை ஆகிய நூல்கள் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், கைக்கிளை, பெருந்திணை, பொதுவியல் என்று பன்னிரு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

வெட்சி என்பது அரசனுடைய படைத் தலைவர் பகைவருடைய நாட்டிற்குச் சென்று அங்குள்ள ஆனிரைகளைக் களவினாலே கொண்டு வருதலைப் பொருந்தியது என்பர். இவ்வாறு செய்தல் போரில் ஆனிரைகளுக்கு கேடு வாரா வண்ணம் காத்தலென்னும் அறமாகும் என்பர். எனினும் ஒரு நாட்டின் செல்வமான ஆனிரைகளைக் கவர்ந்தால் அந்நாட்டரசன் போர் தொடுக்க வருவான் என்பதையே நோக்கமாகக்கொள்ளவேண்டும். மலையும் மலை சார்ந்த பகுதியும் இதற்குரிய இடமாகும் என்றும் ஐப்பசியும் கார்த்திகையுமான கூதிரும் மார்கழியெனும் முன்பனியும் ஆகிய பெரும் பொழுதும், இரவாகிய சிறு பொழுதும் இதற்குரிய காலமென்றும் புலவர் அமைப்பர். இவர்கள் வெட்சி மலரை அடையாளப் பூவாக அணிவர்.

வஞ்சியென்பது நாட்டைக் கவரும் விருப்புடைய வேந்தனும் அதனை அவனிடம் விட விரும்பாத வேந்தனும் போரிடுதலாகும். விட விரும்பாத வேந்தன் போரிடுவதைக் காஞ்சியெனப் பன்னிரு படலம் முதலிய பிற நூல்கள் கூறும். தொல்காப்பியர் வஞ்சியென்றே கூறுவர். இதற்குரிய இடம் காடும் காடு சார்ந்த பகுதியும் ஆகும் என்றும் ஆவணி புரட்டாசித் திங்கள்களாகிய கார் என்னும் பெரும் பொழுதும் மாலையென்னும் சிறு பொழுதும் இதற்குரிய காலமென்றும் புலவர்கள் அமைப்பர். இவர்கள் வஞ்சி மலரை அடையாளமாக அணிவர்.

உழிஞை என்பது ஒரு வேந்தனுடைய தலைநகரைக் காப்பாற்ற அவனுக்குரிய அரணை அவன் பகையரசன் முற்றுகையிடுதலும் ஆகும். தொல்காப்பியரைத் தவிர மற்றையோர் அரணைக் காப்போர் பொருவதை நொச்சித் திணை என்பர். இதற்குரிய இடம் கழனியும் கழனி சூழ்ந்த பகுதியும் என்றும் காலம் ஆறு பெரும் பொழுதும் வைகறை யென்னும் சிறு பொழுதும் என்றும் புலவர் அமைப்பர். புறத்தோன் உழிஞை மலரையும் அகத்தோன் நொச்சியையும் அடையாளமாக அணிவர்.

தும்பை யென்பது தன் ஆற்றலை உலகம் புகழ வேண்டிப் போர் செய்ய வந்த வேந்தனை மாற்று வேந்தனும் தன் ஆற்றலை உலகிற்கறிவிக்க எதிர்த்துச் சென்று பொருவது. இப் போருக்குரிய இடமாகப் பெரு மணலுலகமான கடலைச் சார்ந்த நிலப்பகுதியைக் கொண்டனர். ஆறு பெரும் பொழுதும் மாலையான சிறு பொழுதும் தும்பைக்குரிய காலம் என்று புலவர் கூறுவர். இருவரும் தும்பை மலரை அடையாளமாக அணிவர்.

வாகை யென்பது அந்தணர், அரசர், வணிகர், வேளாளரென்போரும், அறிவரும் தாபதரும், பொருநரும் ஆகிய பலருடைய இயல்புகளை மற்றையோரினும் மிகுதிப்படுத்திக் கூறலாகும். இவ்வாறு கூறுதலில் தாமே கூறுதலும் மற்றையோர் கூறுதலுமாகிய இரு நிலைமையும் உண்டு. பாலைக்கு நிலமில்லையானாற்போல, இதற்கும் தனியே நிலமின்றி, நால்வகை நிலமும் இடமும் போரில் வெற்றி கொள்வதும் வாகையாகும். வெற்றி கண்டோர் வாகை மலரை அடையாளமாக அணிவர்.

காஞ்சியென்பது வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு வகைப்பட்ட நிலையாமை கூறுவதாகும். அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றின் பகுதியினும் நிலையாமையைக் கூறுவதால் நால்வகை மணமும்கொண்ட பெருந்திணையென்னும் அத்திணைக்கு இது புறனாயிற்று, மடலேறுதல் முதலியவை தீய காமம் ஆயினாற்போல உலகியலை நோக்க நிலையாமையும் நற்பொருளன்றாயிற்று. இதுவும் பெருந்திணை போலத் தனக்கென நிலமும் பொழுதும் வரையறையில்லாதது.

காஞ்சித் திணையில் போர்க் களத்திலே இறந்த வீரர்களைப் பற்றிய பல்வேறு நிலைகளைக் கூறும் மறக் காஞ்சி, பேய்க் காஞ்சி, தொடாக் காஞ்சி, ஆஞ்சிக் காஞ்சி, தொகைநிலை முதலியனவும் வீரர்கள் வஞ்சினம் கூறும் வஞ்சினக் காஞ்சியும் இறந்தவர்களை யெண்ணி வருந்திக் கூறும் மன்னைக் காஞ்சியும் அடங்கும். மற்றும் பொதுவாகக் கூற்றுவன் பெருமையைக் கூறும் பெருங் காஞ்சி முதியோர் இளைஞர்கட்கு உலகியல் கூறும் முது காஞ்சியும் கணவன் இறந்தவுடன், உயிர் நீங்கிய மனைவியின் நிலை கண்டோர் இரங்கிக் கூறும் மூதானந்தமும், மனைவியை யிழந்த கணவனுடைய தபுதார நிலையும், கணவனை யிழந்த மனைவியின் தாபத நிலையும், இறந்தவர்களை யெண்ணி மற்றோர் வருந்திக் கூறும் கையறு நிலையும் உறவினர் கூறும் ஆனந்தப் பையுளும் முதுகாட்டை வாழ்த்தும், காடு வாழ்த்தும் போன்றவை யாவும் அடங்கும்.

பாடாண் என்பது பாடுதல் தொழிலையும் பாடப் பெறும் ஆண் மகனையும் நோக்காமல் அவன் ஒழுகலாறாகிய திணையை உணர்த்துவது கைக்கிளை ஒருதலைக் காமம் ஆனாற்போலப் பாடுவோன் பரிசிலைக் காதலிக்கப் பாடப் பெறுவோன் புகழையே காதலிக்கிறான். இருவர் காதலும் ஒன்றாகவில்லை. இத்திணை நிலமும் பொழுதும் வரையறையில்லாதது. அகத்திணையில் வரும் காமப் பொருளைக் கூறுங்கால். ஒருவருடைய இயற் பெயரைச் சுட்டுவதும் பாடாண் திணையாகும்.

முனிவரையும் பார்ப்பனரையும் ஆனிரையையும் மழையையும் முடியுடை வேந்தரையும் உலகையும் வாழ்த்தும் அறுமுறை வாழ்த்தும் தேவர்களை வாழ்த்துவதும் பாடாண் பாட்டாகும். குழந்தைகளிடம் அன்புற்றுக் கூறும் பிள்ளைத் தமிழும், கடவுளரும் மக்கள் தலைவரும் உலாப் போகும்போது எழு பருவ பெண்டிரும் காதலிப்பதாகக் கூறும் உலாவும் பாடாண் பாட்டாகும். கடவுள் வாழ்த்தோடு வரும் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்பனவும், பாடாண் பாட்டு, இனி, அரசர்களையும் வள்ளல்களையும் பாடும்போது கூறும் இயல்மொழி வாழ்த்து கடைநிலை, பரிசில் நிலை, பரிசில் விடை என்பனவும் செவியறிவு நூல் புறநிலை வாழ்த்து என்பனவும், அரசர் துயல்வது கூறும் கண்படை நிலையும் கூத்தரையும் பாணரையும், பொருநரையும் விறலியரையும் ஆற்றுப்படுத்தும், ஆற்றுப்படையும் பிறந்தநாள் விழா முடிசூட்டு விழா முதலியனவும் பாடாண்திணையில் அமைத்துப் பாடப்பெறும்.

புறப் பொருளுக்கு இலக்கியமாக வெண்பாக்களின் வரிசையுடையதெனப் பொருள்படும். இந் நூலின் ஆசிரியர் ஐயனாரிதனார். இவர் தமிழ் நூல்களிற் சிறந்த அறிவுடையவர். சைவ சமயத்தினர், சமரச நோக்கத்தினர். தாம் சேர அரச மரபினராயினும் சோழ பாண்டியரையும் பாராட்டினார். புறப்பொருள் வெண்பாமாலை இளம்பூரணர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் முதலிய பண்டைய உரையாசிரியர்களால் எடுத்தாளப் பெறுகிறது. எனவே இவ்வுரையாசிரியர்கட்கு முன் வாழ்ந்தவர் ஐயனாரிதனார் எனலாம். இவர் காலம் கி. பி எட்டாம் நூற்றாண்டிற்கு முன் என தமிழ்க் கலைக் களஞ்சியம் செப்புகிறது.

இந் நூல் புறத்தின் இலக்கணமாகிய வெண்பாக்களையும், அவ் வெண்பாக்களின் கருத்தைத் தனித் தனியே புலப்படுத்தி ஒவ்வொன்றின் முன்னும் நிற்கும் கொளுக்களையும் உடையது கொளுக் கருத்து. வெண்பாமாலை என்ற பெயரிருப்பினும் கைக்கிளைப் படலத்தில் உள்ள இலக்கியச் செய்யுட்கள் மருட் பாக்களே ஒழிபியலுள்ள வெண்பாக்களுக்குக் கொளுக்கள் காரணம் பெறவில்லை.

இந்நூல் பன்னிரு படலமென்னும் நூலின் வழி நூலென்பது இந் நூலின் சிறப்புப் பாயிரத்தினால் அறியப் பெறும். பன்னிரு படலத்தைப் பின்பற்றியே இந்நூல் வெட்சி கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைகிளை பெருந்திணை உன்னும் பன்னிரு படலங்களையும் ஒழிபு என்னும் ஒரு புறநடையும் உடையது.

இந்நூலின் உரை பதவுரையாக உள்ளது. பதவுரையின் பின் முடிவுகளும் உள்ளன. பெரும்பாலும் வட சொற்கள் பயின்றுள்ளன. எனினும் ஒரு சிறந்த உரை யென்பதில் ஐயமில்லை. உரையாசிரியர் சாமுண்டிதே நாயகர் என்றும் இவரூர் ஐயம் கொண்ட சோழ மண்டலத்து மேற்கானாட்டு மாகறலூர் என்றும் அறிய முடிகிறது. இவ்வூர் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது.

தமிழர்களின் இரு கண்களெனக் கருதும் காதலும் வீரமும் ஒருங்கே கொண்ட அகப் பொருள், புறப் பொருள் இரண்டையும் படித்து தமிழர்தம் பண்டைய மரபுகளை உணர்ந்து மகிழ்வோமாக.

வாழ்க தமிழ்!

கவிதைப் பூங்கா

அறிவொளி அண்ணு!

(கவிஞர் எ. ப. சின்னச்சாமி)

அன்பும் அருளின் பொன்வடிவம்
அறிவுச் சுடரின் பொன்விளக்காம்
என்றும் வாழும் புகழண்ணு!
ஏற்றம் தருகிற அறிவண்ணு!

சரித்திரக் கடலில் மூழ்கிவந்து
சமுதாய சாக்கடை தூய்மைபெற
புரியா மக்கள் வாழ்வதற்குப்
புன்மை சாடிய செயல்வல்லோன்

கடமை கண்ணியம் கட்டென்னும்
கழகத் தம்பியர் உடமையெனும்
மடமை மடையை அடைப்பதற்கு
மக்கள் சமூகம் மண் அணைத்தார்

கழக ஆட்சியை நிலைநாட்டி
கண்ணெனத் தோழமை நலம்செய்தார்
வழங்கும் நல்லறத் தமிழாட்சி
வையகம் போற்றும் நமதாட்சி!

வங்கக் கடலில் துயில்கொள்ளும்
வையகப் புகழ்மலர் மணம்தூவ!
தங்கத் தம்பியர் திறனுட்சி!
தரணியர் போற்றும் நல்லாட்சி!

உணவுத் தேவை நிறைகொள்ளும்
உலகம் புகழும் தன்நிறைவு!
பணத்தின் மதிப்பைச் சமன்செய்ய
பாமரர் வாழ்வும் கடைத்தேற,

அண்ணன் அடிமலர் மணம் பரப்ப
அந்நியர் நாடும் வாழ்த்தொலிக்க!
கண்ணென ஆற்றும் கடமைவழி
காலப் படைப்பில் நலம்இனிக்க!

———

துன்பமே போ! போ!!

— சாதுப்புலவன் —

பிறர் துன்பம் கண்டாலே கண்ணீர் சிந்தும்
பிஞ்சுமனம் பெற்றதாலே பெற்ற தென்ன?
உரம்கொண்டார் ஒருவர்பற் றியெண்ண மாட்டார்
உறக்கமின்றிப் படுக்கையில் உருள மாட்டார்
உரிமையுடன் என்துன்பம் சொல்லு தற்கே
உறவென்று தாய்கூட இல்லை யில்லை!
பெருமூச்சுப் புயலிடையே எண்ணம் ஒன்று
பெருந்துன்பம் தீர்த்துவைப்பான் இங்கு உண்டே!?

அருள்கொண்டு அரவணைக்கும் தாயும் ஆவான்
ஆலயத்தில் நம்துன்பம் கூறித் தீர்ப்போம்
இருகரங்கள் மேலோங்க கண்கள் மூட
இறைவன்பால் என்எண்ணம் செல்லும் போழ்து
அருளாளா! ஆண்டவனே எம்மைக் காப்பீர்!
அடிபற்றிக் கண்ணீரால் விம்மும் ஓலம்
பெருநோயுங் கூன்குருடு நொண்டி மற்றும்
பொறியிழந்தோர் கைகூப்பி நிற்கக் கண்டேன்

கண்திறந்தேன் உள்ளத்தின் கதவும் கூட
கடவுளென்ன செய்திட்டார் இந்நாள் மட்டும்
புண்பட்டோர் புலம்பலையேன் தீர்த்தார் இல்லை
புழுக்கத்தால் துன்பத்தின் பாரம் ஏற
புன்னகையின் மன்னனண்ணு அன்று சொன்ன
பூமணக்கும் செந்தமிழின் அமுதச் சொல்லை
என்னுள்ளம் எண்ணிற்று துன்பம் நீங்கி
எதையும்தான் தாங்கிடுக அண்ணு வாழி!

———

பிணைப்பு!

(ச. கலியனுர்,)

துள்ளும் மீனுய்
அள்ளும் தேனுய்
எண்ணம் வந்திட்டாள் — எழில்
வண்ணம் தந்திட்டாள்!

முல்லைக் கொடியாய்
மல்லை துடியாய்
விரும்பச் சிரித்திட்டாள் — செங்
கரும்பாய்த் தரித்திட்டாள்!

பட்டுக் குஞ்சம்
கிட்டும் நெஞ்சம்
தொட்டுக் காட்டிட்டாள் — வளை
இட்டுக் கூட்டிட்டாள்!

தனிமை வாட
இனிமை ஊட
பேதம் அசைத்திட்டாள் — சங்
கீதம் இசைத்திட்டாள்!

உள்ளம் திறந்து
கள்ளம் துறந்து
கரத்தை நீட்டிட்டாள் — நெஞ்
சுரத்தை கேட்டிட்டாள்!

நீக்கம் ஓட
நோக்கம் கூட
இதயம் இணைத்திட்டாள் — வாழ்
உதயம் பிணைத்திட்டாள்!

பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரட்டிப்பாகிட தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும் நிலச் சீர்திருத்தம்!

வழித் தடங்கள் நாட்டுடமை!

ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!

பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!

குடிசைமாற்று வாரியம்!

கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம் —
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3.
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் (போன்: 2970) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.